# ஹபராதுவ பிரதேச சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 13 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஹபராதுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 நிர்மாண வேலைக்காக கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 1,461,771 தொகை நிதிக் கூற்றுகளின் காட்டப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவிகள் மற்றும் கடன் பட்டோர் ரூபா 1,461,771 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 2,959,356 தொகையொன்று நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவுகள் என காட்டப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 2,959,356 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருத்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 163,630 தொகை நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வருமானம் என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 163,630 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 645,966 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 645,966 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டுகளின் முத்திரை கட்டண பெறுவனவுகள் ரூபா 1,000,000 தொகை நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டின் வருமானம் என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 1,000,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டிற்கான வட்டி என செலுத்தப்பட்டிருந்த ரூபா 50,510 தொகை உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மற்றும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிக் கடன் மீதி ரூபா 50,510 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 838,947 தொகை எனினும், நிதிக் கூற்றுகளில் அவை ரூபா 338,948 தொகையென காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 499,999 தொகையில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானங்கள் ரூபா 500,000 இனால் மற்றும் நிலையான வைப்புக்கள் மீதி ரூபா 500,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கையிருப்பிலுள்ள களஞ்சிய கையிருப்பு ரூபா 1,222,023 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை 1,126,516 என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 95,507 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 6,101,400 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 415,050 இற்கான பொறித் தொகுதிகள் மற்றும் ரூபா 263,900 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் நிலையான சொத்துக்கள் என மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஔ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீபே புவக்வத்த பாதை கொங்கிரீட் பண்ணும் நிர்மாண வேலை தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 192,646 தொகை மீளாய்வாண்டிற்கான பலவின வைப்புக்கள் என காட்டப்பட்டிருந்தமையால் வைப்புக் கணக்குகளின் மீதி மற்றும் கடன் பட்டோர் ரூபா 192,646 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 5,963,846 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.5 தொங்கல் கணக்குகள்

--------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 7,090 இற்கான தொங்கல் கணக்குகளின் வரவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 142,650,503 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளதுவரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், முறையாக பேணப்படுகின்ற கடன் கொடுத்தோர் / கடன் பெற்றோர் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள், விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,181,896 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,475,818 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 வீதவரி மற்றும் ஏக்கர்வரி

-------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,564,098 இற்கான வீதவரி மற்றும் ரூபா 10,300 இற்கான ஏக்கர்வரி என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.2 வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வாடகை

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 127,400 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 212,905 இற்கான வாடகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 முத்திரைக் கட்டணம்

--------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 72,720,970 இற்கான முத்திரை கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 காணிகள் மற்றும் கட்டிட வாடகை

----------------------------------------------------

(அ) ஹபராதுவவில் அமைந்துள்ள மக்கள் வர்த்தக மத்திய நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டடத்தை வாடகைக்கு பெறுவதற்காக லக் சதொச இனால் 2010 நவம்பர் 19 திகதி முதல் 2013 நவம்பர் 18 திகதி வரை மாதாந்த வாடகை ரூபா 35,000 வீதம் மூன்று வருட காலப் பகுதிக்காக உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் முடிவுற்றிருந்த போதும் வாடகை காலத்தை நீடிப்பதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2014 செம்டம்பர் 05 திகதிவரையேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. உடன்படிக்கையின் 24 ஆவது நிபந்தனையின் பிரகாரம் உடன்படிக்கை முடிவடைவதன் மூலம் அல்லது முடிவுறுத்தல் மூலம் வாடகைக்கு பெற்றோர், வாடகை ஆதனத்தில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளைக்கு ரூபா 2,000 இற்கான நட்டம் வாடகைக்கு வழங்கியவருக்கு செலுத்துவதற்கு இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் காலம் 2013 நவம்பர் 18 திகதி முடிவடைந்திருந்த போதும், உடன்படிக்கை கையொப்பமிடாமல் தங்கியிருக்கும் காலப்பகுதிக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 86,000 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) அஹுங்கமவில் அமைந்துள்ள மக்கள் வர்த்தக மத்திய நிலையக் காணி மற்றும் கட்டடத்தை வாடகைக்கு பெறுவதற்காக லக் சதொச இனால் 2009 அக்டோபர் 10 திகதி முதல் 2012 அக்டோபர் 09 திகதி வரை மாதாந்த வாடகை ரூபா 40,000 வீதம் 03 வருட காலப்பகுதிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம்

முடிவடைந்திருந்த போதும், வாடகை காலத்தை நீடிப்பதற்காக 2014 செப்டம்பர் மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

உடன்படிக்கையின் 25 வது நிபந்தனைகளின் பிரகாரம் வாடகை உடன்படிக்கை முடிவடைவதினால் அல்லது முடிவுறுத்தலின் பின்னர் வாடகைக்கு பெற்றவர் வாடகை ஆதனத்தில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 2,000 நட்டமொன்று வாடகைக்கு கொடுத்தவருக்கு வழங்குவதற்காக லக் சதொச இணங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் உடன்படிக்கை முடிவடைந்து தங்கியிருக்கும் காலப்பகுதிக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நட்டம் ரூபா 894,000 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.5 கடை வாடகை

---------------------

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்குக் கொடுப்பது தொடர்பாக 2014 ஆகஸ்ட் 26 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த இடப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் வாடகை உடன்படிக்கை 03 வருட காலத்திற்கு செல்லுபடியாகும் எனவும், அதன் பின்னர் இந்த வாடகையை புதுப்படுத்துவதற்காக வாடகைக்கு பெற்றவர் பிரதேச சபையுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ள வேண்டும், எனினும் ஹபராதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தில் 11 கடைகளும் கொக்கல சுதந்திர கடற்கரை பூங்காவில் 02 கடைகள் மற்றும் அஹுங்கம வர்த்தக தொடர் கட்டிடத்தில் கடை ஒன்றும் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் 03 வது நிபந்தனையின் பிரகாரம் வாடகைக்கு பெற்றவர் எக்காரணம் கொண்டும் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வாடகையை வேறு நபர் ஒருவருக்கு சாட்டுதல் மேற்கொள்வதற்கு அல்லது இடை வாடகை வழங்குதல் மேற்கொள்ளக் கூடாது. அத்துடன் அவ்வாறு செய்யும் இடத்து வாடகை உரிமையை இழக்க நேரிடும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் ஹபராதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தில் 16 ஆம் இலக்க கடை இடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(iii) வாடகை உடன்படிக்கையின் 04 வது நிபந்தனையின் பிரகாரம் வாடகைக்கு பெற்றவர் எக் காரணம் கொண்டும் சபையின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வாடகைக்கு பெற்றுள்ள கடையின் வரைபில் கட்டமைப்பு மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளக் கூடாது. எனினும் ஹபராதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தின் தரை மாடியில் அமைந்துள்ள காட்சி அறையின் முன்பக்கத்தில் காணப்பட்ட பகுதி ஒன்றில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) வாடகை உடன்படிக்கையின் 07 வது நிபந்தனையின் பிரகாரம் வாடகைக்கு பெற்றுள்ள கடை தவிர அதற்கு வெளியே வியாபாரப் பண்டங்கள் வைத்தல் மற்றும் காட்சிக்கு வைத்தல் மேற்கொள்ளக் கூடாது. எனினும் ஹபராதுவ வர்த்தக தொடர் கட்டிடத்தில் தரை மாடியின் கடைக்கு முன்பக்கத்தில் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

(v) உடன்படிக்கையின் 12 வது நிபந்தனையின் பிரகாரம் 03 மாதங்களுக்கு மிகையான காலம் வாடகை செலுத்தாமல் இருக்குமிடத்து வாடகை உடன்படிக்கை முடிவடையும் எனவும், இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்து மேலும் வர்த்தக நடவடிக்கை

மேற்கொள்வதற்கு முடியாதவாறு கடைகள் மூடி முத்திரை வைப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் காணப்பட்ட போதும் 11 கடைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(vi) உடன்படிக்கையின் 16 வது நிபந்தனையின் பிரகாரம் உடன்படிக்கையில் காட்டப்பட்டிருந்த நிபந்தனைகள் ஒன்று அல்லது பல வாடகையாளரினால் மீறப்படுமிடத்து ஒரு கலண்டர் மாத அறிவித்தலின் பின்னர் வாடகையை இரத்து செய்து, வாடகைக்கு பெற்றவரை அந்த கடையில் இருந்து அகற்றுவதற்கு சபைக்கு அதிகாரம் இருந்த போதும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறிய வாடிக்கையாளர்கள் யாருக்கேனும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vii) ஹபராதுவ பழைய பொதுச் சந்தை 07 கடைகளுக்காக ரூபா 500 வீதம் மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்த போதும் 06 கடைகளுக்கான உடன்படிக்கைகள் கையொப்பமிட்டு, கோவைகள் திறக்கப்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

----------------------------------------------

(அ) 1988 இன் 74 இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அனைத்து மந்திரிமாரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல் கூற்று சமர்பிக்கப்பட வேண்டும் எனினும் 2011 ஆண்டின் போது தலைவர், உபதலைவர், மற்றும் 11 மந்திரிமார்களினாலும், 2012 ஆண்டின் போது உபதலைவர், மற்றும் 11 மந்திரிமார்களினாலும், 2013 ஆண்டின் போது உபதலைவர் மற்றும் 07 மந்திரிமார்களினாலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 06 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன் கொண்டுவந்துள்ள ரூபா 6,216 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2014 செப்டம்பர் 05 திகதி வரை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சபை நிதியத்தில் இருந்து ரூபா 141,950 இற்கான முற்பணம் வழங்கியிருந்தது. எனினும் இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 371(ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம் முற்பணம் வழங்கப்பட்டிருந்த விடயம் முடிவடைந்த உடன் அதனை தீர்ப்பதற்கான நடிவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல குறிப்பிட்ட விடயத்திற்கான முற்பணங்கள் நிறைவேற்று அலுவலர்களுக்கு மாத்திரம் வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சாரதிகளுக்கு 02 சந்தர்ப்பங்களில் ரூபா 13,000 இற்கான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) சபையினால் வழங்கப்படும் பல்வேறு சேவைகளுக்காக 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,094,573 இற்கான பெறுமதி கூட்டிய வரி, ரூபா 217,943 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் ரூபா 150,025 தொகையான முத்திரை வரி என்பன கணக்காய்வு திகதியாகிய 2014 செப்டம்பர் 05 திகதி வரை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

(உ) ஜோவி சிறுவர் பூங்கா நிர்மாண வேலை தொடர்பாக மேற் கொள்ளப்பட்டிருந்த காணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பூங்காவின் நிர்மாண வேலை அரசு சாரா நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன எனினும் சபை மற்றும் அந்த நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) சிறுவர் பூங்கா 2012 மார்ச் 19 திகதி திறக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஜுலை 03 திகதி வரை பூங்காவின் நிருவாக விடயங்கள் மற்றும் வருமானம் சேகரித்தல் அரசு சாரா நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2012 மார்ச் 19 முதல் 2013 ஜுலை 03 வரையான காலப்பகுதியில் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்துள்ளது.

(iii) இந்த காணியை பிரதேச செயலகத்தில் இருந்து சபைக்கு உரித்தாக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 செயற்படாத சொத்துக்கள்

---------------------------------------

2012 பெப்ரவரி 27 ஆந் திகதி தலைமை அலுவலகம் மற்றும் அஹுங்கம உப அலுவலகங்களுக்கு சபை நிதியத்தில் இருந்து ரூபா 78,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த இரண்டு நேரப்பதிவு இயந்திரங்கள் கணக்காய்வு திகதியாகிய 2014 செப்டம்பர் 05 திகதி வரை செயற்படுத்தப்படாது காணப்பட்டது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்